**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**E.A.No 15/2026**
**in**
**E.P.No. 2/2018**

Deposition of the witness: PW1

Date: 29.06.2026

Solemnly affirmed by Mr. K. Bibin Raj Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | தனபால் |
| Father's Name | தங்கசாமி |
| Village | மணவாளகுறிச்சி |
| Taluk | கல்குளம் |
| Calling | வழக்கறிஞர் |
| Age | 45 |

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. மனுபட்டிகை சொத்திற்கு செல்வதற்கு முன்பாக வழக்கு தீர்ப்பாணையை பார்த்தேனா என்றால் இல்லை. என்னுடைய வாரண்டை பார்த்தேன். வாரண்டில் தீர்ப்பாணையின் செயல்படுத்தும் பகுதியை குறிப்பிட்டுள்ளதா என்றால் முதல் பாரவிலேயே சொல்லபட்டுள்ளது. பட்டிகை சொத்தின் தெற்கற்றத்தில் மண்குவியல் இருந்ததா என்றால் மண்குவியல் இருந்த இடத்தை சுற்றி கூடுதல் மண்கொண்டு ரோட்டின் உயரத்திற்கு நிரத்தபட்டுள்ளது. அதனால் மண்குவியல் தனியாக தெரியவில்லை.

2. ஏற்கனவே நான் 2011 ல் சென்றபோது இருந்த நிலையையும் தற்போதுள்ள நிலையையும் ஒப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்ய சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை. 2011 ல் இருந்த மண்கற்குவியலை அகற்ற உத்தரவு உள்ளது. 2011 ல் உள்ள நிலையையும் தற்போதுள்ள நிலையையும் ஒப்பீடு செய்ய எனக்கு வாரண்டில் அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2011 ல் இருந்த நிலையில் இருந்து தற்போதுள்ள நிலைக்கு மாற்றியது யார் என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. பி பட்டிகை சொத்தில் வடக்கற்றத்தில் இருந்து தெற்கற்றம் வரை 3 ½ அடி

ஆழத்திற்கு மண்ணை எடுத்து மாற்றுவதற்கு தீர்ப்பாணையில் சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை எனக்கு கொடுத்த வாரண்டில் சொல்லபட்டுள்ளது. வாரண்டில் தெற்கற்றத்தில் உள்ள மண்குவியல் மட்டுமே அகற்ற சொல்லபட்டுள்ளது என்றாலும் தெற்கற்றம் என்பது பி பட்டிகை சொத்தின் முழுபகுதி ஆகாது என்றாலும் சரியல்ல. வாரண்டின் படி தீர்ப்பாணையை நிறைவேற்ற நான் தெற்கற்றத்தில் மட்டுமே செயலாற்ற முடியும் என்றால் சரியல்ல.

3. தீர்ப்பாணையில் குறிப்பிட்டு சொல்லபட்டுள்ள பணியை தவிர வேறு பணி செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரி. அதேபோல் தீர்ப்பாணையை interpretation செய்வதற்கோ அதிகபடுத்துவதற்கோ எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரி. மொத்த பி பட்டிகை சொத்தில் வடக்கற்றத்தில் இருந்து தெற்கற்றம் வரை 3 ½ அடி தோண்டி மண்ணை மாற்றினால் வாதிக்கோ பிரதிவாதிக்கோ லேஅவுட்டில் உள்ள மற்ற நபர்களுக்கோ அவரவர் வீட்டிற்கு சென்றுவர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே அவ்வாறு தான் அந்த ரோடு இருந்தது அதனால் அதனை உபயோகிக்க எந்த தடையும் இல்லை. 3 ½ அடி தோண்டினால் பிரதான ரோட்டில்இருந்து பி பட்டிகை ரோட்டின் நுழைவிலேயே பள்ளமாக இருக்கும் என்றால் சரியல்ல.

4. பிரதான ரோட்டில் இருந்து பி பட்டிகை ரோட்டிற்கு சாய்தளமாக மண்மேடு 2011 ல் இருந்தது. பி பட்டிகை சொத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி தற்போது சாய்வாக இருப்பதால் மழைநீர் செல்வதற்கு பாதிப்பில்லை என்றால் சரியல்ல. மழைநீர் முழுவதும் வாதியின் வீட்டிற்குள் செல்கிறது. எனது ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் அடிப்படையில் அசல் வழக்கில் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. 31.01.2026 ல் நான் மனுசொத்தில் சென்றபோது அசம்பாவிதம் ஏதும் நடந்ததா என்றால் இல்லை. என் பணியை யாரும் தடை செய்தார்களா என்றால் இல்லை நான் பார்வையிட மட்டுமே சென்றேன் பணி செய்ய செல்லவில்லை. அப்போது அசாதாரண சூழ்நிலை ஏதும் இல்லை என்றால் சரி. பணி செய்யும்போது ஏற்படலாம். நான் என்னுடைய யூகத்தின் அடிப்படையில் போலிஸ் பாதுகாப்பு கேட்டிருந்தேன் என்றால் சரியல்ல இடையூறு கண்டிப்பாக ஏற்படும் என்று நம்புகிறேன்.

5. நான் சொல்வது போல் 3 ½ அடிக்கு மண்ணை அகற்றினால் பி பட்டிகை சொத்தை பாதையாக பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல. 3 ½ அடி பள்ளம்

தோண்டினால் ரோட்டில் இருந்து பள்ளத்திற்குள் குதித்து தெற்கற்றம் சென்று மீண்டும் 3 ½ அடி உயரம் தாவி ஏறி தான் தனிநபரின் வீட்டிற்கு செல்ல முடியும் என்றாலும் இதுதான் உண்மையான நிலவரம் என்றாலும் நான் மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் நேரடியாக சென்று ஆய்வு செய்து புகைப்படம் எடுத்து அறிக்கை தயார் செய்துள்ளதால் என்னால் தெளிவாக சொல்லமுடியும். மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

6. நான் 5.2.2026 ல் தாக்கல் செய்துள்ள முதல் புகைப்படத்தில் தார்ரோடும் பி பட்டிகை சொத்தும் ஒரே மட்டத்தில் இருப்பது தெரிகிறது என்றால் சரி. பிரதான சாலையை ஒட்டி பி பட்டிகை சாலையில் 3 ½ அடி மண் அகற்றினால் பள்ளமாகும் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் சாய்வுதள மண்மேடு ஏற்கனவே அமைந்திருந்தது அதேபோல் அமைக்க வேண்டும். 2வது புகைப்படத்தில் தெற்கற்றம் சாய்வாக உள்ளது என்றால் சரியல்ல. ஒரேமட்டாக உள்ளது. உண்மையில் சாய்வாக உள்ளது என்றாலும் இயல்புக்கு மாறாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பள்ளமாக இருந்ததை பிரதிவாதி 3 ½ அடி பள்ளத்தை நிரப்பியதாக எனது அறிக்கையில் நான் சொல்லியிருப்பதற்கு அதனை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை.

7. 2011 ல் மண்குவியலை அவர் ஏற்படுத்தியதாக சொன்னதால் அவர்தான் பள்ளத்தை நிரப்பியதாக நான் ஆய்வுக்கு சென்றிருந்தபோது அங்கிருந்த 2,3 நபர்கள் சொன்னார்கள். பிரதிவாதியும் அதனை ஒப்புகொண்டு என்னிடம் சொன்னார். மேற்படி விவரத்தை என் அறிக்கையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பாரா 3 ல் சொல்லபட்ட பணி இந்த நீதிமன்றத்தால் வாரண்டில் சொல்லபட்டுள்ளதா என்றால் சொல்லபட்டுள்ளது. 5.7.2012 ல் இருந்த நிலைமையில் அந்த பாதையை சரிசெய்ய வேண்டும் என்று தீர்ப்பாணையில் சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை மண்குவியலைஅகற்ற சொல்லி தீர்ப்பாணையில் உள்ளது. அவ்வாறு நிறைவேற்றும் பட்சம் 5.7.2012 ன் நிலைமைக்கு தான் பி பட்டிகை சொத்தை அமைக்க முடியும்.

8. மண்குவியல் கற்களை எப்படி அகற்ற வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை. தீர்ப்பாணையில் சொல்லபடாத விவரங்களையும் தீர்ப்பாணைக்கு எதிராகவும் மனுதாரருக்கு ஆதரவாகவும் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்த இடைக்கால

அறிக்கை ரத்து செய்யதக்கது என்றாலும் நான் ஒருதலைபட்சமாக செயல்படுவதால் ஆணையராக செயல்பட அருகதை அற்றவர் என்றாலும் சரியல்ல.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. அசல் வழக்கில் நான் நீதிமன்ற ஆணையர் என்றால் சரி. அசல்வழக்கில் இடைக்கால அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையை நான் தான் தாக்கல் செய்தேன். என் வரைபடத்தில் தெற்கற்றத்தில் சுமார் 10 அடி நீளத்திற்கு மணல் ஜல்லி உபயோகமற்ற கற்கள் குவிக்கபட்டிருப்பதாக வரைபடத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரி. அவ்வாறு குவிக்கபட்டிருப்பதால் மழைநீர் வாதியின் வீட்டின் காம்பவுண்டிற்குள் செல்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. நிறைவேற்று மனுவில் நான் நீதிமன்ற ஆணையராக மனுசொத்தை பார்வையிட்டபோது மனுசொத்து எவ்வாறு இருந்தது என்றால் பி பட்டிகை சொத்தின் தெற்கற்றத்தில் இருந்து வடக்கற்றம் வரை 3 ½ அடி உயரத்திற்கு மண்இட்டு நிரப்பியிருந்தார்கள். தற்போது உள்ள நிலையில் மழைநீர் வாதியின் வீட்டிற்குள் செல்லுமா என்றால் மழைநீர் முழுவதும் வாதியின் வீட்டிற்குள் செல்லும்.